***இத்தாலி மற்றும் இத்தூாதரகத்தின் கீழ் உள்ளீர்க்கப்பட்ட சைப்பிரஸ், கீரிஸ், மோல்டா உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தின் வேறு நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கான அறிவித்தல்.***

***தடைசெய்யப்பட்ட உணவு பொருட்களை Murraya Leaves / கறிவேப்பிலையை இலங்கையிலிருந்து இத்தாலி மற்றும் சைப்பிரஸ், கீரிஸ், மோல்டா ஆகிய நாடுககளுக்கு கொண்டு வருதல்.***

*ஐரோப்பிய ஒன்றியத்தின் EUROPHYT அறிவித்தலுக்கிணங்க Murraya Leaves / கறிவேப்பிலையை இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு கொண்டு வருதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆயினும் கடந்த நவம்பர் மாதம் (2018) தொடக்கம் இலங்கையிலிருந்து இத்தாலி நாட்டுக்கு வருகை தந்தவர்களின் பயணப்பொதிகளில்* Murraya Leaves / *கறிவேப்பிலை எடுத்துவரப்பட்டுள்ளமை இத்தாலி நாட்டு விமான நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இவற்றுள் பெரும்பாலானவை இத்தாலியின்* **கட்டானியா விமான நிலையத்தில்** *கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இத்தாலி நாட்டு சுங்க அதிகாரிகளால் தெரிவிக்கதப்பட்டுள்ளது.*

*ஐரோப்பிய ஒன்றியத்தினால் தடைசெய்யப்பட்ட உணவு பொருட்களை ஒன்றியத்தின் ஹஉறுப்பு நாடுகளுக்கு கொண்டுவரப்படுவதனால், இலங்கையிலிருந்து இத்தாலி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஏனைய உணவு பொருட்கள் தொடர்பிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்லாம் என்ற காரணத்தினால்,*

*Murraya Leaves /* **கறிவேப்பிலையை** *தங்களது பயணப் பொதிகளில் எடுத்துவர வேண்டாமென அறிவுருத்தப்படுகின்றீர்கள். ஆவ்வாறு கொண்டுவரப்படும் சந்தர்ப்பத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து மேற்கொள்ளப்படும் பயணப்பொதி பரிசோதனையின் போது தேவையற்ற அசௌகரியங்களுக்கு உட்படலாம் என்பதை மேலும் அறியத்தருனின்றாம்.*

*இது தொடர்பாக தங்களது மிகுந்த கவனத்தை செலுத்துமாறும் , இலங்கையிலிருந்து வருகைதரவிருக்கும் தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு தெரிவிக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

*இலங்கை தூாதரகம் - ரோம், இத்தாலி*

24/12/2018